**மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனி - 2022**

----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் (‘‘கம்பனி’’) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டம் மற்றும் ஏனைய நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை எனக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையில் நான் ஒரு அபிப்பிராயத்தினை தெரிவிக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக திட்டத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு திட்டத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5,1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 12,430,943 தொகையான இருப்புக்கள், இயலளவுப் பெறுமதி ரூபா 205,575 ஆன நிலையான சொத்துக்கள் ரூபா 173,727 தொகையான கையில் மிகுதியாக உள்ள பணம் என்பன பௌதீக ரீதியாக காணப்படுகின்றதா என்பது தொடர்பான எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள இருப்புக்கள், நிலையான சொத்துக்கள், கையில் மிகுதியாக உள்ள பணம் என்பன பௌதீக ரீதியாக காணப்படவில்லை. இச்சொத்துக்களை இந்த நிறுவனம் Hambantota International Port Group Ltd. (HIPG) மற்றும் Hambantota International Port Services Ltd.(HIPS) ஆகிய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கும் போது துறைமுக அதிகார சபைக்கும் அந்த நிறுவனங்களுக்கும் இந்த இருப்பும் நிலையான சொத்துக்களும் ஒப்படைக்கப்பட்டன. எனவே இவைகள் பௌதீக ரீதியாக காணப்படவில்லை. | பொறுப்புக்கூறவேண்டிய உத்தியோகத்தர்களால் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 அமைப்பு தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் திரண்ட நட்டம் ரூபா 7,602,406,852 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு கம்பனியின் தேறிய சொத்துக்கள் ரூபா 7,527,406,852 மறைப் பெறுமதியாகும். அவ்வாறே கம்பனியின் மொத்த நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 2,099,760,231 ஆக இருந்ததுடன் கம்பனியின் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 9,627,167,082 ஆகும். அதற்கிணங்க கம்பனியின் நடைமுறைச் சொத்துக்களைவிட செலுத்த வேண்டிய கடன் மீதி 458 சதவீதத்தினை மிகைத்திருந்ததன் காரணமாக இக்கடன் பணத்தை செலுத்துவதற்கு கம்பனிக்கு உள்ள இயலுமை நிச்சயமற்றது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2017 நவம்பர் 13 ஆந் திகதியிலிருந்து நிறுத்தப்பட்டு கம்பனியை கலைப்பதற்காக பணிப்பாளர் சபையினால் 2018 பெப்ரவரி 15 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கான அமைச்சரவை தீர்மானம் 2021 மே 31 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.<br>எனினும் 2023 பெப்ரவரி 02 ஆந் திகதி வரை ஒரு கலைப்பாளரினை நியமிக்க முடியாதிருந்தது. | இக்கம்பனியின் கணக்குகளைத் தீர்த்து மூடுவதற்காக 2017 மற்றும் 2018 காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையின் அடிப்படையில் 2020 யூலை மாதம் புதிய பணிப்பாளர் சபை மாகம்புர முகாமைத்துவ (தனியார்) கம்பனிக்காக நியமிக்கப்பட்டது எனவும் அதற்கிணங்க இக்கம்பனியை தோற்றுவிக்கும் போது அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு உருவாக்கப்பட்ட கம்பனி எனவும் அதற்கிணங்க கம்பனியை கணக்குப் பார்த்து மூடும் நடவடிக்கைக்காகவும் அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் முறைப்படியாக மற்றும் சட்டத்துக்கு இணங்க நடவடிக்கை எடுத்து கம்பனிக்காக முன்வந்துள்ள சட்டத்தரணியின் ஆலோசனையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் அதற்கிணங்க 2021/12/10 ஆந் தகிதி கொழும்பு வர்த்தக நீதிமன்றத்தில் CHC/97/21 Co ஆம் இலக்க வழக்கு இலக்கத்தின் கீழ் இக்கம்பனியை கணக்குப் பார்த்து மூடுவது தொடர்பாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது எனவும் 2020 யூலை மாதம் புதிய பணிப்பாளர் சபையை நியமித்ததன் பின்னர் எந்த தாமதமும் இன்றி இந்த வழக்கு நடவடிக்கைகளுக்காக எடுக்க | கம்பனியை கவைலப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதனால் அதனை துரிதமாக அமுல்ப்படுத்துவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் கம்பனிக்காக தோன்றியுள்ள வழக்கறிஞரின் ஆலோசனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது எனவும் தயவாகத் தெரிவிக்கிறேன்.

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| ஹற்றன் நெசனல் வங்கி கடன் மீதி | 9,617,942,991 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் | கம்பனியால் 2022 ஆம் ஆண்டின் போது கடன் பணத்தின் மீதியை உறுதிப்படுத்துவதற்காக மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் உரிய வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் நிறுவனத்துடன் காணப்படுகின்ற வழக்கு நடவடிக்கையின் காரணமாக மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாது என வாய்மொழி மூலம் தெரிவிக்கப்பட்டது. | வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்காக மீதியினை உறுதிப்படுத்துதல் வேண்டப்பட்டு பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| அரசாங்கத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி | 17,782,563 | மூல ஆவணங்கள், மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள், காலப்பகுப்பாய்வு அறிக்கை மற்றும் துணை ஆவணங்கள் | 2019-08-16 ஆந் திகதிய பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது ரூபா 17,182,563 ஆன அரசாங்கத்திடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையில் ரூபா 12,430,943 தொகையான இருப்புக்களைப் பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தினை வேண்டி செயலாளர் துறைமுகங்கள் மற்றும் கடல்சார் அமைச்சிற்கு வேண்டுதல் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்திற்கு இணங்க 2019-10-30 ஆந் தகிதி செயலாளரின் மூலம் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கு இம்மீதிகளைப் பதிவழிப்பது தொடர்பாக முன்னாள் செயலாளரின் தலைமைத்துவத்தில் இலங்கை துறைமுகங்கள் | வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்காக மீதிகளை உறுதிப்படுத்துதல் வேண்டப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் ஏனைய உரிய சான்றுகளை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| கப்பல் எண்ணை காப்புறுதிக்காக கிடைக்க வேண்டிய மீதி | 28,040,453 | | | |
| வணிக கடன்பட்டோரிட மிருந்து கிடைக்க வேண்டிய மீதி | 3,589,879 | | | |
| செலுத்த வேண்டிய ஏனையவைக | 6,842,977 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| ள் தொடர்பான மீதி | | | அதிகாரசபையின் மற்றும் எமது நிறுவனத்தின் உத்தியோகத்தர்களையும் அழைத்து நீண்ட கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. எனினும் எந்த எழுத்துமூல பதிலும் இதுவரை கிடைத்திருக்கவில்லை. மேலும் இந்த கிடைக்க வேண்டிய மீதிகள் தொடர்பாக எழுத்துமூலம் உறுதிப்படுத்துவதற்கு போதியளவான ஆவணங்கள் நிறுவனத்திடம் தற்பொழுது காணப்படவில்லை. | |
| கிடைக்க வேண்டிய பிடித்து வைத்தல் வரி மீதி | 4,301,292 | மூல ஆவணங்கள், மீதிகளை உறுதிப்படுத்துதல் கடிதம் | அந்த ரூபா 4,301,292 தொகைக்குரிய வரிச் சான்றிதழ் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னையவைகளாவதுடன் அவற்றினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதுள்ளது என உரிய நிதி நிறுவனங்களிடமிருந்து தெரிவிக்கப்பட்டது. | உரிய தொடக்க சான்றிதழ் ஆவணங்களைச் சமர்ப்பித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து கலந்துரையாடி இறுதித் தீர்விற்கு வருதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை துறைமுக அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க கம்பனியிடமிருந்து அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய மீதியாக ரூபா 5,800,921 காட்டப்பட்டிருந்தும் கம்பனியின் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க மேற்கூறிய மீதி செலுத்த வேண்டிய மீதியாக காட்டப்படாதிருந்தும் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தீர்த்துவைப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவ்வாறான ரூபா 5,800,921 பணம் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு செலுத்த வேண்டியவை என எந்த சான்றும் எங்கள் கம்பனியின் ஏடுகளில் 2007 ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையுடன் கலந்துரையாடி உரிய பணம் செலுத்த வேண்டிய ஒரு மீதியாக இருப்பின் அதனை கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நியதிச்சட்ட கொடுப்பனவுகள் உரிய காலப்பகுதியின் போது தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து முன்கொண்டு வரைப்பட்டுக்காணப்படும் ரூபா 2,381,117 தொகையான செலுத்த வேண்டிய வருமான மீதி ரூபா 794,047 தொகையான பெறுமதி சேர்த்தல் அடிப்படையில் செலுத்த வேண்டிய வரி மீதி மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 223,032 தொகையான ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு பண மீதி ஆகிய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு கம்பனியால் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிகள் 2017 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வரும் மீதியாக உள்ளதுடன் அவற்றினைத் தீர்த்து வைப்பதற்குரிய எந்த மூல ஆவணத்தினையும் தேடிக் கண்டு பிடிப்பதற்கு 2019 ஆம் ஆண்டின் பின்னர் முடியாதுள்ளது. | வருமான வரி மீதி மற்றும் ஏனைய மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை மற்றும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்ட 03/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 2.2 ஆம் பிரிவு | சுற்றறிக்கைக்கு இணங்க கம்பனி 'F'' தொகுதியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது டன் அதன் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளரின் மாதாந்த படிக்காக வரிசை அமைச்சின் செயலாளரின் சிபாரிசு மற்றும் நிதி அமைச்சின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணக்கமற்ற வகையில் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளருக்கு மாதாந்த படியாக | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போதும் நிறுவனத்தின் ஆரம்பத்திலிருந்தும் அதாவது 2013 ஆம் ஆண்டளவிலிருந்து காணப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் தலைவருக்கு ரூப 100,000 மற்றும் முகாமைத்துவ பணிபாளருக்கு ரூபா 90,000 வீதம் செலுத்தப்பட்டது. மேலும் சனாதிபதி அலுவலகத்தினால் வழங்கப்பட்ட 2020 சனவரி 13 ஆந் திகதிய PS/SP/Circular/02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் தலைவருக்கு ரூபா 100,000 மாதாந்த படி | முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| முறையே ரூபா 100,000 மற்றும் ரூபா 90,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மாத்திரம் முறையே ரூபா 1,100,000 மற்றும் ரூபா 990,000 செலுத்தப்பட்டது. | பணிப்பாளர் சபைக்கு ரூபா 25,000 உச்சளவு மாதாந்த படியினைச் லெுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. இப்படியினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தமது தனிப்பட்ட வாகனத்தை கடமைச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்காக எடுக்கப்படுகின்ற படியான ரூபா 50,000 தொடர்பாக உரிய வரிசை அமைச்சு செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,914,050,233 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 441,980,579 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 4,356,030,812 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக ரூபா 3,484,075,886 தொகையான வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் காரணமாக இருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் மூலம் எடுக்கப்படுகின்ற கொள்கைரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் மாகம்புர துறைமுக முகாமைத்துவ தனியார் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2017 நவம்பர் 13 ஆந் திகதி முடியவடைந்ததன் அடிப்படையில் செயற்பாட்டு வருமானம் இல்லாமை மற்றும் கடன்கள் மீதான வட்டி என்பன இன்னும் நட்டமாகக் காணப்படுவதற்கு காரணமாக இருந்தது.

### 2.2. பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் பகுப்பாய்வு

| | **2022** | **2021** |
|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** |
| வருமானம் | - | - |
| நேரில் செலவுகள் | - | - |
| நிருவாகச் செலவுகள் | (5,540,594) | (9,202,863) |
| செயற்பாட்டு இலாபம்/(நட்டம்) | (5,540,594) | (9,202,863) |
| தேறிய நிதிசார் கிரயம் | (424,433,752) | 143,947,702) |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம்/(நட்டம்) | (3,484,075,886) | (288,830,015) |
| வரிக்கு முன்னைய தேறிய இலாபம் | 3,914,050,233) | (441,980,579) |
| வருமான வரி | - | - |
| வரிக்கு பின்னை தேறிய இலாபம் | (3,914,050,233) | (441,980,579) |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2017 நவம்பர் 13 ஆந் திகதி முடிவடைந்ததன் காரணமாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கம்பனிக்கு வருமானம் கிடைத்திருக்கவில்லை.

ii. 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 288,830,015 தொகையான வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 3,484,075,886 வரை 1,106 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

iii. மீளாய்வாண்டின் போது நிருவாகச் செலவுகள் ரூபா 5,540,594 ஆக இருந்ததுடன் அதனுள் பணிப்பாளர் சபை மற்றும் இரண்டு முகாமையாளர்களுக்குச் செலுத்திய படியாக ரூபா 4,299,000 உள்ளடக்கப்பட்டிருந்தது. அது நிருவாகச் செலவின் சதவீதமாக 77 சதவீதமாகும்.

**2.3 வீதாசார பகுப்பாய்வு**

| | 2022 | 2021 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் | 0.218:1 | 0.278:1 |
| விரைவுச் சொத்துக்கள் விகிதம் | 0.216:1 | 0.276:1 |

2021 ஆம் ஆண்டில் நடைமுறை விகிதம் மற்றும் திரவச் சொத்துக்கள் விகிதம் முறையே 0.278:1 மற்றும் 0:276:1 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அது 0.218:1 மற்றும் 0.216:1 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளைக் கலைப்பதற்கு 2018 பெப்ரவரி 15 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 04 ஆண்டுகள் கடந்திருந்தும் கலைத்தல் நடவடிக்கை பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் செயற்பாடற்றுக் காணப்பட்ட இக்கம்பனியை கலைக்கும் நடவடிக்கைகளின் காலதாமதம் காரணமாக 2019 இலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை நிருவாகச் செலவுகளாக ரூபா 31,983,639 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும் 2022 சனவரியிலிருந்து நவம்பர் வரை மாதாந்த சம்பளமாக ரூபா 50,000 வீதம் இரண்டு பகுதிநேர நிதி முகாமையாளர்களுக்கு ரூபா 1,100,000 செலவு செய்யப்பட்டிருந்தது என | இரண்டு பகுதிநேர முகாமையாளர்களின் நியமனத்திற்குரிய பணிப்பாளர் சபை பத்திரத்திற்கு இணங்க இரண்டு முகாமையாளர்களை சேவையில் ஈடுபடுத்தும் தேவைப்பாடு தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டது. | முகாமைத்துவத்தினால் எடுக்கப்படும் தீர்மானம் வினைத்திறனாகவும் நியாயமானதாகவும் இருத்தல் வேண்டும். |

அவதானிக்கப்பட்டதுடன் கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறாத நிலைமையில் இவ்வாறு இரண்டு நிதி முகாமையாளர்களை சேவையில் ஈடுபடுத்தும் தேவைப்பாட்டின் நியாயத்தன்மையினை எழுத்து மூலம் உறுதிப்படுத்துதல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது கம்பனியின் ஊழியர்களை இழப்பீடு செலுத்தி நீக்கும் போது உருவாகிய சிக்கலான நிலைமையானது கொழும்பு கைத்தொழில் நீதிமன்றத்தில் A/37/2017 ஆம் இலக்க கைத்தொழில் இணக்கப்பாட்டு தீர்ப்பு மற்றும் 2018 பெப்ரவரி 02 ஆந் திகதி தரப்பினர்களுக்கிடையே உருவாக்கிக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டு நிபந்தனைகளுக்கு இணங்கிக் கொண்டதன் அடிப்படையில் முடிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2017 நவம்பர் மாதத்திற்காக நிலுவை மேலதிக நேர வேலைப்படி மற்றும் / அல்லது 2018 சனவரி வரையான நிலுவைச் சம்பளம் செலுத்த வேண்டியிருக்குமாகவிருந்தால் அக்கொடுப்பனவு மாத்திரம் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தி பூர்த்திசெய்யப்பட வேண்டுமென இணங்கிக்கொண்ட நிபந்தனைகளுக்க முரணாக கம்பனி செயற்படாதிருந்த 2017 திசெம்பர் மற்றும் 2018 சனவரி மாதங்களுக்குரிய பிரயாணச் செலவுகள், தங்குமிட படிகள் செயலாற்றல் படிகள், மற்றும் வாகனப் படிகள் ரூபா 12,211,073 தொகையான ஏனைய படிகள் ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2017, 2018, 2019, 2020, மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகளின் மிகைக் கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அப்போது இருந்த நிதி முகாமையாளரினால் அப்போது எடுக்கப்பட்ட அந்த பணிப்பாயளர் சபை அங்கீகாரம் தொடர்பாக அக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது என எங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. | இழப்பீட்டுப் பணத்தை செலுத்தும் போது இணங்கிக்கொண்ட நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அந்த நிபந்தனைகளுக்கு முரணாக ஏதாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்குமாகவிருந்தால் உரிய கொடுப்பனவுகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அவற்றினை மீள அறவீடு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பெறுகைக் கையேடு மற்றும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் குறிக்கோளுக்கு இணங்க பெறுகையின் போது மிகவும் சிறப்பான வெளிப்படைத் தன்மை மற்றும் சிறந்த நிருவாகம் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு கம்பனி கவனித்துக்கொள்ள வேண்டிய போதிலும் கம்பனியால் 2020 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக தோன்றியிருந்த சட்டத்தரணிகள் கம்பனிக்கு ரூபா 7,250,000 தொகையும் 2021 ஆம் ஆண்டின் போது சட்டத்தரணிகள் கம்பனிகளுக்கு ரூபா 3,005,000 தொகை மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 109,235 தொகை சட்டச் செலவுகளாக செலுத்தப்பட்டிருந்தும் அந்த சட்டத்தரணிகளை தெரிவுசெய்வதற்காக வெளிப்படைத்தன்மையான ஒரு நடைமுறை பின்பற்றப்பட்டது என்பதற்கான தகவல்களும் சான்றுகளும் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே உரிய சட்ட ஆலோசனைக் கம்பனியுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிறுவனத்தின் சட்டரீதியான நடவடிக்கைகளுக்காக தோன்றியிருந்த சட்டதரணிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டதுடன் புதிய பணிப்பாளர் சபை 2021 யூலை மாதம் நடுப்பகுதியில் நியமிக்கப்பட்டது. அச்சந்தரப்பத்தில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள DDR 1347/19 ஆம் வழக்கு சம்பந்தமாக பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் அந்த வழக்கு வகையானது (DDR வழக்க்கு என்பதாக) அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் அடுத்த அழைக்கும் திகதியாக 2020-08-18 ஆந் தகிதி நீதிமன்றத்திற்கு அழைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது . இந்த வழக்கின் விசேடத்துவமானது வழக்கிற்கு அழைக்கப்படும் முதலாவது திகதியிலேயே எதிர்ப்புக்கள் கோவை செய்யப்படும் என்பதாகும். அவ்வாறு இல்லையாயின் நீதிமன்றத்தினால் வழக்கில் வேண்டிக்கொண்ட ரூபா 4.4 பில்லியன் பணத்திற்காக சட்டத்தீர்ப்பு வெளிப்படுத்தப்படுதல் நிர்ணயிக்கப்படுமாகவிருந்தால் கம்பனி பாரதூாரமான சிக்கலுக்கு உள்ளாகும். ஏனெனில் அதுவரை கம்பனியிடம் இருந்த பணம் ரூபா 1.2 பில்லியனுக்கு அண்மித்த பணம் என்பதனாலாகும். அதற்கிணங்க கூடியளவு விரைவாக நீதிமன்றம் அந்த எதிர்ப்பினை கோவை செய்தல் அவசியமானது என்பதனால் | பெறுகை நடவடிக்கைகளின் போது வெளிப்படைதன்மை மற்றும் சிறந்த நிருவாகத்தினைக் கொண்டட ஒரு நடைமுறையினைப் பின்பற்றுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

அதற்காக காலம் இல்லாததனால் நம்பகமாகவும் மிக விரைவாகவும் எதிர்ப்பினைத் தயாரிப்பதற்காக சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுதல் பிரதான தேவைப்பாடாக உள்ளது என்பதனால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட்டது. அதன் போது சட்டதரணிகளுக்காக வழக்கறிஞர் கட்டணம் பணமாகச் செலுத்தப்பட்டதானது முழுமையான வழக்கு நடவடிக்கைகளுக்குமாகும். மீண்டும் ஏதாவது கொடுப்பனவு இதற்காக மேற்கொள்ளப்படமாட்டாது. 2021 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 3,005,000 நிறுவனத்தை கலைப்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு நியமிக்கப்பட்ட சட்டதரணிகளுக்கு செலுத்தப்பட்ட வழக்கறிஞர் கட்டணமாகும். அவர்களும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தெரிவு செய்யப்பட்டனர்.